**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் - 2010**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குக் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட ரூபா 17,781,048 கூட்டுத்தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் 2011 யூலை 08 ஆந் திகதிய வரைவு அறிக்கையின் மூலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கெண்டுவரப்பட்டிருந்தன. அவ் அனைத்துக் குறைபாடுகளும் சீராக்கப்பட்டு மீளத்திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2011 யூலை 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான குறைபாடுகள் மேலும் இருப்பதற்கான சாத்தியத்தினை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது.

(ஆ) பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செலவில் அப் பாடநெறியுடன் தொடர்பற்ற ரூபா 1,930,522 ஆன வெளிநாட்டுப் பயணச்செலவினம் உள்ளடங்கியிருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில்

செலவினமொன்றாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அச் செலவினம் நிகழ்ச்சித்திட்டச் செலவினத்தில் 55% ஆகும்.

### 1.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நான்கு ஊழியர் கடன் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதித் தினத்தன்று காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,369,533 ஆன போதிலும் பட்டோலைகள் மற்றும் கடன் பதிவேட்டின் படி அத் தினத்தன்று நிலவிய மீதிகள் முறையே ரூபா 19,375,702 ஆகவும் ரூபா 19,399,859 ஆகவும் இருந்தமையால் கட்டுப்பாட்டுக் கணக்கும் பட்டோலைகளும் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) மூன்று ஊழியர் கடன் மற்றும் முற்பணக் கணக்கு விடயங்களின் படியான மீதிகளிற்கும் பட்டியல்களின் படியுமான மீதிகளிற்கிடையே ரூபா 3,508 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டமையால் பட்டோலைகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

---

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீளாய்வாண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வரை தீர்வு செய்யப்படாத ரூபா 141,378 வழங்கல் முற்பணங்களிற்கான விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கையேடு | |
| நி.பி. 371 | (i) பணி முடிவுற்ற உடன், பெறப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 10 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 38,900 கொள்வனவு முற்பணங்கள் 44 தொடக்கம் 120 நாட்கள் வரையான கால தாமதத்துடனும் 20 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 534,735 கலப்பு முற்பணங்கள் 07 தொடக்கம் 206 நாட்கள் வரையான கால தாமதத்துடனும் தீர்க்கப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் 02 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 18,200 முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) தீர்க்கப்படாத கலப்பு முற்பணங்களில் 2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 25,732 தொகையும் 2006 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500 தொகையும் மீளாய்வாண்டின் ஒக்டோபர் மாதத்தில் வழங்கப்பட்ட ரூபா 150,600 தொகையும் கணக்காய்வுத் திகதி வரைக்கும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய தேசிய கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 4:2:1 ஆம் பிரிவு | 03 ஆண்டுகளிற்கு பிரதான கொள்வனவுகள் மற்றும் வருடாந்த விபரமான கொள்வனவுகளின் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 52,908,686 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (இ)) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்குமான தாபன விதிக்கோவையின் iii ஆம் அத்தியாயத்தின் 18.16.6(ஆ) மற்றும் 2007 ஓகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007/(I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை. | அமைச்சரவையின் முன் அங்கீகாரமின்றி 60 வயதினை தாண்டிய உத்தியோகத்தர் ஒருவர் 2005 திசெம்பர் மாதத்திலிருந்து 05 ஆண்டுகளிற்கும் மேலாக ஆறு மாதங்களிற்கு ஒரு முறை பல்வேறு பணிகளும் ஒப்படைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். |

### 1.2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 1994 ஜுன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக நிறுவனத்தின் பதவியணிக்காக மொழித் தேர்ச்சிப் படியாக மீளாய்வாண்டில் ரூபா 165,475 செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவன செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும்

செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 283,040,641 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 243,233,010 ஆகும். மீண்டெழும் செலவினங்களிற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 284,600,000 மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,559,359 மிகையொன்றாகியிருந்தது. முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்களிற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 232,100,000 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 11,133,010 வரை குறைவடைந்திருந்தது.

### 2.1.2 கிடைத்துள்ள மூலதன ஏற்பாடுகளின் பற்றாக்குறை

செலவிடப்படாத மூலதன மானியங்கள் கணக்கின் மீதிக்கு சமனான தொகையொன்று தொடர்புடைய வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்படாத மூலதன மானியப் பேரேட்டுக் கணக்கின் மீதி ரூபா 31,455,664 ஆனதுடன் தொடர்புடைய வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 3,937,122 ஆகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 கற்கைச் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) கல்வி நடவடிக்கைகள்

2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இரண்டு மாணவர் குழுக்களும் மீளாய்வாண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பீடம் | உயர்தரத்தில் சித்தியடைந்த ஆண்டு | கல்வி ஆண்டு | 2010 ஆம் ஆண்டில் முதற்தடவையாக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கல்வி பயின்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொலைநோக்குக் கலைகள் | 2008 | 2008/2009 | 59 | 286 |
| | 2009 | 2009/2010 | 61 } 120 | |
| சங்கீதம் | 2008 | 2008/2009 | 138 | 685 |
| | 2009 | 2009/2010 | 139 } 277 | |
| நடனம் மற்றும் நாடகக் கலைகள் | 2008 | 2008/2009 | 195 | 935 |
| | 2009 | 2009/2010 | 188 } 383 | |
| | | | -------------- | ------------- |
| மொத்தம் | | | 780 | 1906 |
| | | | ===== | ==== |

(i) 2008 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் சித்தியடைந்த 392 மாணவர்கள் 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் அம் மாணவர்களைப் பதிவுசெய்து கொள்ளல் ஒரு வருடம் தாமதமடைந்திருந்தது.

(ii) இரண்டு கல்வி ஆண்டுகளிற்குரிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தமையால் பதிவு செய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்காகியிருந்தது.

(iii) 2008 ஆம் ஆண்டில் கபொத (உ.தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருந்த மாணவர்கள் அடுத்த ஆண்டின் கல்வி நடவடிக்கைகளிற்காக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் பட்டப்படிப்பிற்காக நீண்ட காலத்தினை செலவிட வேண்டியேற்பட்டிருந்தது.

**(ஆ) பரீட்சை பெறுபேறுகள்**

-----------------------------------

2002/2003, 2003/2004, 2004/2005 மற்றும் 2005/2006 ஆம் கல்வியாண்டுகளிற்கு 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்த இறுதியாண்டுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தன. அப் பெறுபேறுகள் தொடர்பான விபரங்கள் கழே காட்டப்பட்டுள்ளன.

| பீடம் | பாடநெறி | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | முதலாம் வகுப்புச் சித்தி | இரண்டாம் வகுப்பு உயர் சித்தி | இரண்டாம் வகுப்பு கீழ்ச் சித்தி | சாதாரண சித்தி | குறைச் சித்தி/ சித்தியின்மை |
|---|---|---|---|---|---|---|---|
| சங்கீதம் | அழகியற் கலைமானி (விசேடம்) | 268 | 15 | 69 | 62 | 52 | 70 |
| நடனம் மற்றும் நாடகம் | அழகியற் கலைமானி (விசேடம்) | 365 | 04 | 62 | 125 | 153 | 21 |
| | அழகியற் கலைமானி (விசேடம்) | 340 | 18 | 96 | 108 | 88 | 30 |
| தொலைநோக்குக் கலைகள் | நடனக் கலைமானி (விசேடம்) | 112 | 08 | 22 | 20 | 56 | 06 |

(i) சங்கீத பிடம் மற்றும் நடனம் மற்றும் நாடகக் கலைகள் பீடங்களில் 2008/2009 ஆம் கல்வி ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய பரீட்சைகள் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில் தாமதமாக நடாத்தப்பட்டிருந்ததுடன் பெறுபேறுகள் 2011 பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் வெளியிடப்பட்டிருந்தன.

(ii) நடன மற்றும் நாடகக் கலை பீடத்தில் 2007/2008 ஆம் கல்வி ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய அழகியற்கலைமாணி விசேட பட்டப்பாட நெறிப் பரீட்சை தாமதம் செய்யப்பட்டு 2009 நவம்பர் மாதத்தில் நடாத்தி முடிக்கப்பட்டிருந்ததுடன் கட்புலக் கலைப் பீடத்தில் 2007/2008 ஆம் கல்வி ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய நடனக் கலைமாணி விசேட பட்டப்பாட நெறிப் பரீட்சை ஒரு வருடத்திற்கும் மேல் தாமதம் செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்தது. இப் பீடத்தில் 2008/2009 ஆம் கல்வி ஆண்டில் நடாத்தப்பட வேண்டிய பட்டப்பாட நெறிப் பரீட்சை 2011 யூன் மாதம் வரை நடாத்தி முடிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த ஆய்வு குழுவிவாதங்கள் (Symposium)**

---

பாதீட்டு மதிப்பீட்டில் ஆராய்ச்சிகள் மற்றும் பிரசுரங்களிற்காக ரூபா 170,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 34,500 ஆகும். 2010 ஆம் ஆண்டில் 39 ஆய்வு விவாத அறிக்கைகள் கிடைத்திருந்ததுடன் அதில் 25 இனைத் திருத்தும் சபைக்கு மீளவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் படி பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கான ஆய்வு நடவடிக்கைகளிற்காக போதியளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 ஒப்பந்த நிர்வாகம்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கட்புலக் கலைகள் பீடத்தில் கலாமண்டபத்தினை புனர்நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2007 யூன் மாதத்தில் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் வேலைகள் முடிவுறுகையில் 2008 மே மாதம் வரை ஒரு வருடம் தாமதமடைந்திருந்தது. அப் புனர்நிர்மாண நடவடிக்கைகளில் குறைபாடுகள் இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 2 ½ ஆண்டுகள் கடந்திருந்தும் அக் குறைபாடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. இவ் ஒப்பந்தத்தின்

இறுதிச் சிட்டை தொலைந்திருந்ததுடன் அதன் பிரதியின் மீது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 95,233,365 இற்கான இசை பீடம் மற்றும் நடனப் பீட கட்டிடங்களின் நிர்மாணச் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்ட ஒப்பந்தத்தின் படி அந்த நிர்மாணங்கள் இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் வேலைகள் முடிவடையாதிருந்ததுடன் தாமதக் கட்டணமான ரூபா 2,380,834 தொகை அறவிடப்பட்டிருக்கவுமில்லை.

**2.2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறித்துரைத்த 05 நிதியங்களுடன் தொடர்புபட்ட ரூபா 135,613 அந் நிதியங்களின் பெயரில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் மற்றும் விடுதிகள் நடாத்திவரப்படுகின்ற ரூபா 2,117,041,000 பெறுமதியான விலை மதிப்பீடு செய்யப்பட்ட காணி மீளாய்வாண்டின் ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அக் காணிகளின் சட்டபூர்வமான உரித்தினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(இ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கையேட்டின் 2.8.4 ஆம் பந்தியின் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நிறுவனத்திற்கு வெளியிலிருந்து அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான வெளிவாரி அங்கத்தவர் ஒருவரின்றிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பாதுகாப்புச் சேவையினை வழங்குவதற்காக கிடைத்திருந்த கேள்வி மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் கிடைத்திருந்த 12 கேள்வி மனுக்களில் 09 மனுக்கள் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு மதிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரை கொள்வனவுச் சபையினால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் கொள்வனவுச் சபையின் அங்கீகாரமின்றி வரி நீங்கலான ரூபா 1,348,500 மாதாந்தக் கட்டணமான கூடிய கிரயத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

நீண்ட காலமாக அசைவுறாது காணப்படுகின்ற ரூபா 265,096 இற்கான இருப்பு விடயங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையினை எடுக்காது தொடர்ந்தும் இறுதி இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.5 நூலக நிர்வாகம்

----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விரிவுரையாளர் ஒருவருக்கு 10 புத்தகங்கள் என்ற எல்லைக்குட்பட்டு வெளியே எடுத்துச் செல்வதற்கு நூலகப் புத்தகங்களை வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து விலகி விரிவுரையாளர் ஒருவரிற்கு 36 புத்தகங்கள் வரை விநியோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இப் புத்தகங்களில் 2010 திசெம்பர் மாதத்தில் மீளளிக்கப்பட வேண்டிய காலம் முடிவடைந்திருந்த போதிலும் மீளளிக்கப்படாதிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 79 ஆகும்.

(ஆ) வெளியே எடுத்துச் செல்வதற்கான நூலகப் பிரிவினால் 2000 தொடக்கம் 2006 வரையான காலப்பகுதியினுள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த புத்தகங்களில் மிளளிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 350 ஆனதுடன் 2007 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்டிருந்த புத்தகங்களில் மிளளிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 150 ஆகும்.

### 2.2.6 விடுதி நிர்வாகம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 ஒக்தோபர் 17 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ராஜகிரிய மற்றும் தெஹிவளையில் நிர்மாணிப்பதற்கு தீர்மானமாகியுள்ள

விடுதிகளிற்காக ரூபா 165,400,000 ஏற்பாடு செய்யப்பட்டிருக்கையில் அந் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை தொடங்கப்படாதிருந்ததுடன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த 16 விடுதிகளிற்காக வருடந்தோறும் ரூபா 12,300,000 வாடகை செலுத்தி விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

(அ) வாடகைக்குப் பெறப்பட்டிருந்த 07 விடுதிகளிற்காக அரசாங்க மதிப்பீட்டாளரின் வாடகையினைக் காட்டிலும் ரூபா 95,000 மேலதிகமாக வாடகையினைச் செலுத்திவருவதன் காரணமாக அவ் விடுதிகளை விலை மதிப்புச் செய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 165,399 தொகை சிக்கனமற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்படுகிறது.

**2.2.7 வாகனக் கட்டுப்பாடு**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 07 வேன் வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 03 வாகனங்கள் பெற்றோல் வாகனங்களாக காணப்பட்டமையால் எரிபொருள் கிரயத்தில் இலாபமற்ற நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் எரிபொருள் கட்டுப்பாட்டின்மையும் வாகனங்கள் குறைப்பயன்பாட்டு நிலையில் காணப்பட்டமையும் அந்த நடவடிக்கையினை சிக்கனமான முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) வாகன வாடகை உடன்படிக்கைகளில் எரிபொருள் லீற்றர் ஒன்றிற்கு பயணிக்க வேண்டிய உச்ச கி.மீ. எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதற்கும் குறைவாக பயணிப்பின் கூடுதலாக நுகரப்படும் எரிபொருளிற்கு செலுத்தப்படுகின்ற கிரயத்தினை உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்படும் வாடகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படுதல் வேண்டுமாயினும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 07 மாத தெரிவுகளில் ரூபா 255,141 தொகையான அவ்வாறான கிரயம் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி, அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேரவேலை மணித்தியாலத்தினைக் காட்டிலும் மேலதிகமாக வேலைசெய்த 04 சாரதிகளிற்கு 08 மாதங்களிற்கு ரூபா 342,625 மேலதிகநேரப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.8 கூட்டுத் திட்டம்

------------------------

வெளி நிறுவனமொன்றிற்கு ரூபா 959,445 இனைச் செலுத்தி 2008 – 2012 காலப்பகுதியினை உள்ளடக்கியதாக கூட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத் திட்டம் PED/12 ஆம் இலக்க 2003 ஜுன் 02 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாளதுவரையாக்க ப்படாதிருந்ததுடன் அது கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீடானது ஆண்டின் இறுதிவரைக்கும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்களிற்கும் செலவினங்களிற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்படமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) சில்லறை முற்பணங்கள்

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) விடுதி நிர்வாகம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு